## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C/ Chapter XXV BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 244/2023 |
| Deposition of witness | : | LW-2/PW-2 |
| Name | : | பண்ணீர் செல்வம் |
| Father's /Husband Name | : | சோமசுந்தரம் |
| Village | : | கோடையான்தோட்டம் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 69 |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day July 2025.
Accused A1,A2 A3 present. APP and denfence councel present .

**முதல் விசாரணை:-**

அ.சா.1 எனக்கு தெரியும், எனது நண்பர், அ.சா.1-ன் வீடு எனது தெருவிற்கு பக்கத்தில் உள்ளது.கடந்த 18.02.2021 தேதி நான் வீட்டில் இருந்தபோது அ.சா.1-ன் வீட்டில் திருடிபோய் விட்டதாக அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பேசி கொண்டு இருந்ததை கேள்விப்பட்டு நான் அ.சா.1ன் வீட்டிற்கு சென்று பார்த்தேன். அ.சா.1 என்னிடம் அவரது வீட்டின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு இருப்பதாக கூறினார். நான் அ.சா.1யை வீட்டிற்கு செல்ல வேண்டாம் என்று கூறி போலீசாருக்கு தகவல் தெரிவிக்க கூறினேன். அ.சா.1 போன் மூலம் கும்பகோணம் தாலுக்கா போலீசாரிடம் தகவல் கூறினார். போலீசார் வந்த பின்னர் அவர்களுடன் நான் உள்ளே சென்று பார்த்தபோது அறைகதவு பீரோ உடைக்கப்பட்டு இருந்தது. அதில் உள்ள பொருட்கள் சிதறிகிடந்தது. பீரோவில் இருந்த 20000 பணம் , தங்க நகை மற்றும் வெள்ளி பொருட்கள் காணாமல் போய் இருந்தது. அ.சா.1 உடன் நானும் கும்பகோணம் தாலுக்கா காவல்நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் அ.சா.1ன் வீட்டிற்கு பக்கத்து தெரு என்றால் சரிதான். அ.சா.1 வீட்டுற்கு அருகாமையில் தொடர்ந்து நான்கு ஐந்து வீடுகள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் சம்வம்வந்தன்றும் நகைகளை போலீசார் கைப்பற்றிய பிறகும் இரண்டு முறை விசாரித்தார்கள். அ.சா.1 எனக்கு 20 வருடங்கள் பழக்கம். போலீசாருக்கு போன் செய்து அ.சா.1ன் வீட்டிற்கு எவ்வளவு

நேரத்தில் வந்தார்கள் என்றால் அரை மணி நேரத்தில் வந்தார்கள். அ.சா.1ன் வீட்டிற்கு அருகாமையில் உள்ள CCTV கேமராகளை போலீசார் பார்த்தார்கள் என்றால் தெரியாது. போலீசார் விசாரணையில் பூட்டுகள் உடைந்தும், பொருட்கள் சிதறியும் கிடந்தன என்றும், சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தங்கம், வெள்ளி, 20000 பணம் ஆகியவை இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து சிதறிகிடந்த டிராயர் பூட்டுகள் ஆகியவற்றை கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றினார்கள். நகைகள் கைப்பற்றியபிறகு 15–16 நாட்களில் என்னை போலீசார் விசாரித்தார்கள். புகாரை சண்முகசுந்தரம் காவல்நிலையத்தில் வைத்து எழுதினார். நான் சொல்ல வில்லை அவரே எழுதினார்.நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 எனது நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாலுக்கா காவல்நிலையத்தில் வேலை பார்துள்ளேனா என்றால் மேற்கு காவல்நிலையத்தில்தான் வேலை பார்த்தேன். ,

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்று கொண்டு தொடர்ச்சியாக கீழ்கண்ட குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

சம்பவம் சம்மந்தமாக நேரிடையாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போன் செய்து சொன்னபிறகு நான் சென்று பார்த்தேன். எண் நம்பருக்கு போன் செய்யவில்லை திருடுபோனதாக பேசிக்கொண்டு இருந்ததை கேள்விப்பட்டு நான் சென்று பார்த்தேன். சம்பவம் சம்மந்தமாக போலீசாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளேன். அ.சா.1 எனது பழக்கம் என்பதால் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர் எனக்கு பழக்கம்தான் அதனால் மட்டுமே சாட்சி சொல்ல வரவில்லை. போலீசார் சாட்சியம் சொல்ல அழைத்தால் வந்துள்ளேனா என்றால் சம்மன் கொடுத்தால் வந்துள்ளேன்.

**<u>3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

**வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/- S.Baladhandayutham Bsc.,B.L,.
Judicial Magistrate No.II,
Kumbakonam.